இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 96 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 30 – ஞாயிற்றுக்கிழமை 16 நவம்பர் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 96: Thiruvalluvar Year - 2056 - Ayppasi 30 - Sunday 16 November 2025 - Chennai 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும், தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவு திட்டத்தை தொடங்கி வைத்து, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவினை வழங்கி அவர்களுடன் கலந்துரையாடினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும், தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவு திட்டத்தை தொடங்கி வைத்து, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவினை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, டாக்டர் மா. மதிவேந்தன், மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தூய்மைப் பணியாளர்களுக்கான ‘முதலமைச்சரின் உணவுத் திட்டம்’ டிச.6 முதல், அனைத்து மாநகராட்சி – நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்!

# தூய்மைப் பணியாளர் செய்வது வேலை அல்ல, சேவை!

## சென்னையில் திட்டத்தைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, நவ.16 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, குடியிருப்புக்கான வீடுகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் உரையாற்றுகையில், “தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத் திட்டம் டிச.6 - முதல் அனைத்து மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்” என்றும் “தூய்மைப் பணியாளர் செய்வது வேலை அல்ல, சேவை” என்றும் குறிப்பிட்டார்.**

முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, குடியிருப்புகளுக்கான வீடுகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கக்கூடிய, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும், தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவு திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு கொண்டு செல்லும் வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, டாக்டர் மா.மதிவேந்தன், மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மாநகரின் தூய்மைக்கு - கடுமையாக உழைக்கும் தூய்மைப் பணியாளர்களே காரணம்!**

தினமும் காலையில் விடிகின்ற போது நம்முடைய சென்னை, முந்தைய நாள் குப்பைகள் இல்லாமல், தூய்மையாக இருக்கிறது என்றால், அதற்குக் காரணம், இரவு முழுவதும் கடுமையாக உழைக்கின்ற, தூய்மைப் பணியாளர்களாக இருக்கக்கூடிய நீங்கள்தான்!

அப்படிப்பட்ட உங்களுக்கு உணவு வழங்கும் இந்த ‘முதலமைச்சரின் உணவுத் திட்டத்தை’ தொடங்கி வைப்பதில் நான் உள்ளபடியே பெருமை அடைகிறேன்!

என்னதான், சத்தான உணவு - டயட் - எக்சர்சைஸ் என்று இருந்தாலும், நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்றால், அதற்கு அடிப்படை என்னவென்று கேட்டால், தூய்மைதான்!

**பேரிடரிலிருந்து மக்கள் மீண்டிட தூய்மைப் பணியாளர்களின் தூய பணி!**

வெயில் மழை வெள்ளம் - புயல் என்று இந்த மாநகரம் எந்தப் பேரிடரை எதிர்கொண்டாலும், அதிலிருந்து மீண்டு வருவதில் உங்களுடைய பணிதான் மிக முக்கியமானதாக இருக்கிறது!

உங்களின் ஒப்பற்ற உழைப்பால்தான், நம்முடைய சுற்றுப்புறம் சுத்தமாக இருக்கிறது!

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

### தேர்தலில் வெற்றி பெறாதோரின் நம்பிக்கையையும் பெறும் அளவுக்கு

## தேர்தல் ஆணையம் நியாயமான முறையில் தேர்தல்களை நடத்திட வேண்டும்!

### பீகார் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, நவ. 16 -**

**பீகார் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், “பெரும் வெற்றியைப் பெற்றுள்ள மூத்த தலைவர் நிதிஷ் குமார் அவர்களுக்கு எனது பாராட்டுகள்” என்றும், “தேர்தலில் வெற்றி பெறாதோரின் நம்பிக்கையையும் பெறும் அளவுக்கு தேர்தல் ஆணையம் நேர்மையான முறையில் தேர்தல்களை நடத்திட முன்வர வேண்டும்” என்றும் குறிப்பிட்டார்.**

**பீகார் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:**

அனைவருக்கும் பாடங்களை வழங்கியுள்ள பீகார் சட்டமன்றத் தேர்தல்:

**மூத்த தலைவர் நிதிஷ் குமாருக்கு பாராட்டுகள்!**

பெரும் வெற்றியைப் பெற்றுள்ள மூத்த தலைவர் நிதிஷ் குமார் அவர்களுக்கு எனது பாராட்டுகள். பீகார் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அவருக்கு எனது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஓயாமல் பரப்புரை மேற்கொண்ட இளந்தலைவர் தேஜஸ்வி யாதவ் அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

நலத் திட்ட விநியோகம், சமூக & கொள்கைக் கூட்டணிகள், நாம் சொல்ல வேண்டிய அரசியல்ரீதியான செய்தியைத் தெளிவாக மக்களிடம் சொல்வது, இறுதி வாக்கு பதிவாகும் வரை அர்ப்பணிப்புடன் தேர்தல் பணியாற்றுவது எனப் பலவற்றையும் ஒரு தேர்தல் முடிவு பிரதிபலிக்கிறது. இந்தியா கூட்டணியில் உள்ள அனுபவமிக்க தலைவர்கள் இத்தகைய செய்தியை உணரவும், இனி எழும் சவால்களை எதிர்கொள்வதற்கான திட்டங்களை வகுக்கவுமான ஆற்றலைப் பெற்றவர்கள்.

அதேவேளையில், இத்தேர்தல் முடிவுகள் தேர்தல் ஆணையத்தின் குளறுபடிகளையும் பொறுப்பற்ற செயல்களையும் இல்லாமல் ஆக்கி விடாது. தேர்தல் ஆணையத்தின் மீதான மரியாதை இதுவரை இல்லாத அளவுக்குக் கீழிறங்கியுள்ளது. வலுவான, நடுநிலையான தேர்தல் ஆணையத்தைக் கோருவது நம் நாட்டு மக்களின் உரிமை. தேர்தலில் வெற்றி பெறாதோரின் நம்பிக்கையையும் பெறும் அளவுக்கு தேர்தல் ஆணையம் நியாயமான முறையில் தேர்தல்களை நடத்திட முன்வர வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### பீகார் தேர்தல்:

## திடீரென 3 லட்சம் வாக்காளர்கள் உயர்வு!

### தேர்தல் ஆணையம் குளறுபடி! அதிர்ச்சி தகவல்!

*புதுடெல்லி, நவ. 16 -*

*பீகார் இறுதி வாக்காளர் பட்டியலுக்கும் தேர்தலுக்கு பிறகு தேர்தல் ஆணையம் வெளியிட்ட கணக்குகளில் குளறுபடி கண்டுபிடிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திடீரென 3 லட்சம் வாக்காளர்கள் உயர்ந்துள்ளது தெரியவந்துள்ளது.*

*243 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட பீகார் மாநிலத்திற்கு இரண்டு கட்டங்களாக சட்டப் பேரவை தேர்தல் நடைபெற்றது.*

*பீகாரில் 75 ஆண்டு கால தேர்தல் வரலாற்றில் 67 சதவீத வாக்குகள் வாக்குகள் பதிவாகி சாதனை படைத்துள்ளாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது.*

*இந்நிலையில், பீகார் இறுதி வாக்காளர் பட்டியலுக்கும் தேர்தலுக்கு பிறகு தேர்தல் ஆணையம் வெளியிட்ட கணக்குகளில் குளறுபடி ஏற்பட்டுள்ளதால் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*பீகார் சிறப்பு திருத்தம் செய்த பின்னர் இறுதி வாக்காளர் பட்டியலில் 7 கோடியே 42 லட்சம் வாக்காளர்கள் உள்ளதாக உள்ளதாக தெரிவித்த தேர்தல் ஆணையம், தேர்தலுக்கு பிறகு 7 கோடியே 45 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர் என்று தெரிவித்துள்ளது.*

*இறுதி வாக்காளர் பட்டியலை விட 3 லட்சம் வாக்காளர்கள் எண்ணிக்கை எப்படி உயர்ந்தது என்ற கேள்வி எழுந்துள்ளது.*

*66.91% பேர் வாக்களித்தனர் என்று தெரிவித்த தேர்தல் ஆணையம் எத்தனை வாக்காளர்கள் வாக்களித்தனர் என்பதை வெளிப்படையாக தெரிவிக்கவில்லை.*

*இறுதி பட்டியலை விட தேர்தலுக்குப் பிறகு எப்படி வாக்காளர் எண்ணிக்கை உயர்ந்தது என்ற கேள்வியை எதிர்க்கட்சிகள் எழுப்பி உள்ளன.*